செ.வெ.எண்: 97 நாள் :01.03.2022

# திருநெல்வேலி மாவட்ட மின்ஆளுமை சங்கத்தின் கீழ்மின்-மாவட்டமேலாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன மாவட்ட ஆட்சித்தலைவர் வே.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

திருநெல்வேலி மாவட்ட மின்ஆளுமை சங்கத்தின் கீழ் மின்-மாவட்ட மேலாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. பி.இ.,(BE) அல்லது பி.டெக் (B.Tech) பொறியியல் படிப்பில் கணினிஅறிவியல் (Computer Science), கணினிபொறியில் (Computer Science), தகவல்தொழில்நுட்பம் (Information Technology), தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (Information and Communication Technology) ஆகியதுறைகளில் பட்டம்பெற்றவராக இருக்கவேண்டும். அல்லது மூன்றாண்டு இளங்கலை (Graduate) படிப்புமுடித்து, முதுகலை (Postgraduate) படிப்பில்எம்.சி.ஏ, (M.C.A.,) எம்.எஸ்.சி (M.Sc.,) கணினிஅறிவியல் (Computer Science), தகவல்தொழில்நுட்பம் (Information Technology), மென்பொருள் பொறியியல் (Software Engineering) போன்ற படிப்பு படித்தவராக இருக்க வேண்டும். வேறு துறை படிப்பு படித்தவர்கள் இத்தேர்வில் பங்கேற்க முடியாது. விண்ணப்பதாரர் கண்டிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதற்கான இருப்பிடச்சான்றிதழ் அல்லது பிறப்பிடச்சான்றிதழ் இணைக்கவேண்டும். தகுதியுடையோர் https://tirunelveli.nic.in இணையதளம் வழியாக வருகிற 14-03-2022 மாலை 6-00 மணிக்குள் தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின விபரங்கள் மற்றும் ஆன்-லைன் தேர்வுகள் குறித்த விபரங்கள் 21-03-2022 அன்று இணையதளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் வேறு விபரங்கள் எதுவும் அனுப்பப்பட மாட்டாது. ஆன்-லைன் தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் வருகிற 02-04-2022 சனிக்கிழமை அன்று திருநெல்வேலியில வைத்து நடைபெறவிருக்கும் ஆன்-லைன் தேர்விற்கு நேரில் வரவேண்டும். அதனைத்தொடர்ந்து ஆன்-லைன் தேர்வில் மதிப்பெண் தரவரிசையில் முன்னிலை பெற்றவர்களுக்கு மட்டும் நேர்முகத்தேர்வு நடைபெறும். இப்பதவிக்கான தகுதிகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள் போன்ற முழுவிபரங்களை https://tirunelveli.nic.in என்ற இணையதளத்தில் காணலாம்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி.